

தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் மங்களூர் வடக்கு ஒன்றியம், அரசங்குடி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் நிதி ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப் பட்ட புதிய பேருந்து நிழற்கூடத்தினை திறந்து வைத்தார். உடன் மங்களூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அடரி சின்ன சாமி, முன்னாள் ஒன்றிய பெருந் தலைவர் சுகுணா சங்கர், பொதுக்குழு உறுப்பினர் ஆலம்பாடி ராஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதி வெங்க டேசன், ராமதாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

"நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் பல்லாண்டு!" கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

# சென்னை மேற்கு மாவட்டத்தில் எழுச்சியுற நடத்துவோம்!

## மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்! - மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை, மே 6-

"நாடு போற்றும் நான்காண்டு! தொடரட்டும் பல்லாண்டு" என்ற தலைப்பில் கழக அரசின் நான்காண்டு மகத்தான சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் - தலைமைக் கழகம் அறிவித்த கூட்டங்களை சென்னை மேற்கு மாவட்டத்தில் பகுதி வாரியாக மிக எழுச்சியாக நடத்துவோம் என மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாக மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவித்துள்ளார்.

கழக அரசின் நான்காண்டு மகத்தான சாதனைகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் தலைமை கழகம் அறிவித்துள்ள "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற தலைப்பில் கூட்டங்களை பகுதி வாரியாக மிக எழுச்சியாக நடத்துவோம் என மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப் பட்டுளளதாக மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு!

சென்னை மேற்கு மாவட்ட கழக ஆலோசனைக் கூட்டம், நேற்று 05.05.2025 - திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் சென்னை மேற்கு மாவட்டம் கழக அலுவலகம் அமைந்துள்ள எண்.20/32, காம்தார் நகர் முதல் தெரு, நுங்கம்பாக்கத்தில் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்று எழுச்சியுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள் ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, பகுதி செயலாளர்கள் ந.இிராமலிங்கம், எம்.சி, ஏஆர்பி.எம்.காமராஜ், எம்.சி, மா.பா.அன்புதுரை, எஸ். மதன்மோகன், எம்.சி, ச.பரமசிவம், தொகுதி பொறுப்பாளர்கள் வே.கௌதமன், சி.எச்.சேகர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வி.எஸ்.ராஜ், மு.ராஜகாந்தம், வி.என்.ராஜன், எஸ்.சேரன், பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.டி.ஆர்.நாதன், ஜெ.நற்குணநாதன், ஜோஸ் டேனியல், ராபர்ட், வெற்றிசெல்வி மாணிக்கம், ரவிராஜ்குமார், சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வட்ட கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் அறிவிக்கப்பட்ட தீர்மானத்தினை எடுத்துரைத்து மாவட்ட செயலாளர் சிறப்புரையாற்றிய விவரம் வருமாறு:-

நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் மகத்தான நாயகர் இந்தியாவின் No.1 முதல்வர் திராவிட மாடல் அரசின் கதாநாயகன் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், கழக இளம் தலைவர் துணை முதல்வர் அவர்களுக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக பாராட்டுதலையும், வாழ்த்துகளையும், நன்றியினையும் மாவட்ட கழகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

தலைமைக் கழகம் அறிவித்துள்ள "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற தலைப்பில் பகுதி வாரியாக தலைமை கழகம் கொடுக்கப்பட்டுள்ள சொற்பொழிவாளர்களை வைத்து வெகு விமர்சிகையாக நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினோம்.

தலைவர் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட நிர்வாகிகள் சார்பாக நடத்தப்பட்ட தொடர் 72 நிகழ்ச்சிகள் (பொதுக்கூட்டம், கருத்தரங்கம், விளையாட்டு போட்டிகள், நலத்திட்ட உதவிகள்) நடத்திய அனைவருக்கும் மாவட்ட கழகம் சார்பில் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்தோம்.

இந்த மாதத்திற்குள் பகுதி வாரியாக BLA2 மற்றும் BLC கூட்டம் நடத்தப்பட வேண்டும் என எடுத்துரைத்தோம்.

BLA2 மற்றும் BLC மூலம் வீடு வீடாக சென்று நம் கழக அரசின் சாதனைகளை துண்டறிக்கை மூலம் சென்று அடைய செய்ய வேண்டும் என தெரிவித்தோம்.

ஜூன் மாதம் முதல் கழக உறுப்பினர் சேர்க்கை தொடங்கியவுடன் கழக அரசின் திட்டங்கள் மூலம் பயன் பெறும் பயனாளிகள் மற்றும் மாற்று திறனாளிகளையும் கணக்கெடுத்து அவர்களை கழக உறுப்பினர் சேர்க்கை மூலம் அவர்களை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என அறிவுறுத்தினோம்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தெரிவித்துள்ளார்.

## சேலம் மத்திய மாவட்டக் கழகம் சார்பில்

# 20 இடங்களில் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கை!



சேலம், மே 6-

சேலம் மத்திய மாவட்டக் கழகம் சார்பில் 20 இடங்களில் கீழ்க்கண்டவாறு கழக அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் என்று மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த அவரது அறிக்கை வருமாறு:-

கழக அரசு இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள் நலன் போற்றும் வகையில், மாநில உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் தீரத்துடன், சமூகநீதியைப் பாதுகாத்து, சட்டமன்ற மாண்பினை நிலைநாட்டி, ஜனநாயகக் கோட்பாடுகளை உயர்த்திப் பிடிக்கும் அரசாகவும், ஒன்றிய பா.ஜ.க அரசின் எதேச்சதிகாரப் போக்கிலிருந்து அரசியல் சட்டம் தந்துள்ள கூட்டாட்சிக் கருத்தியலைப் பாதுகாக்கும் முதன்மையான மாநில அரசாகவும் விளங்குகிறது. நான்கு ஆண்டுகளை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் திராவிட மாடல் அரசின் மக்களின் மகத்தான பேரன்பைப் பெற்ற முதலமைச்சராகவும் இந்தியாவிற்கே ரோல் மாடலாக தமிழ்நாட்டின் தனிப் பெருந்தலைவராகவும் திகழும் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியின் **"நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்களை** சேலம் மத்திய மாவட்டம் முழுவதும் கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலும் குறைந்த பட்சம் நான்கு தெருமுனைக் கூட்டங்க ளும், அதே போல ஒவ்வொரு பகுதி கழகத்திலும் குறைந்தபட்சம் நான்கு தெருமுனைக் கூட்டங்க ளும் நடத்துவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதிகளில் மாலை சுமார் 05.00 மணிக்கு தொடங்கி,

இரவு 08.30 மணிக்குள் நிறைவடைந்திடும் வகையில் எழுச்சியோடும், பொது மக்களிடம் கழக அரசின் சாதனைகள் சென்றடையும் வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**ஓமலூர்**

சட்டமன்றத் தொகுதி - கழக அமைப்பு - நாள் - பேச்சாளர்கள் விவரம் வருமாறு:-

ஓமலூர் - ஓமலூர் வடக்கு ஒன்றியம்- 9.5.2025 - ஆர். நரசிம்மன், ஓமலூர் - ஓமலூர் கிழக்கு ஒன்றியம் - 10.05.2025 - சி.குமரவேல் (சி.பி.சிங்கார வேல்), ஓமலூர் - தாராமங்கலம் கிழக்கு ஒன்றியம்- 11.05.2025 - சி.குமரவேல் (சி.பி. சிங்காரவேல்) வெ.சரண்யா, ஓமலூர் - காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் - 12.05.2025 - வி.கவி.கணேசன், ஓமலூர் -காடையாம்பட்டி மேற்கு ஒன்றியம் - 08.05.2025 - முனைவர் மு. சுப்ரமணிய சிவா

**சேலம் (தெற்கு)**

சேலம் (தெற்கு)- அம்மாபேட்டை பகுதி -09.05.2025 - வி.கவி.கணேசன், சேலம் (தெற்கு)- கிச்சிப்பாளையம் பகுதி - 10.05.2025- முனைவர் மு.சுப்ரமணிய சிவா, சேலம் (தெற்கு) - குகை பகுதி - 11.05.2025 - நாமக்கல் இராஜகோபால்,சேலம் (தெற்கு) - தாதகாப்பட்டிபகுதி- 12.5. 2025- முனைவர் மு. சுப்ரமணியசிவா, சேலம் (தெற்கு) -கொண்டலாம்பட்டிபகுதி - 8.5.2025 - நாமக்கல் இராஜகோபால்

**சேலம் (மேற்கு)**

சேலம் (மேற்கு) - சூரமங்கலம் பகுதி - 09.05.2025 - சி.குமரவேல் (சி.பி.சிங்கார வேல்), சேலம் (மேற்கு) - மெய்யனூர் பகுதி-10.5.2025 - நாமக்கல் இராஜ கோபால் செ.யோகஸ்ரீ, சேலம் (மேற்கு) - அழகாபுரம் பகுதி - 11.05.2025 - திருச்செங்கோடு இந்திர மூர்த்தி, சேலம் (மேற்கு) - ஓமலூர் தெற்கு ஒன்றியம் -12.05.2025 - நாமக்கல் இராஜகோபால், சேலம் (மேற்கு) -சேலம் வடக்குஒன்றியம் - 08.05.2025 - பவித்ரம் கண்ணன் (எ) ஜானகிராமன்

**சேலம் வடக்கு**

சேலம் (வடக்கு) -அஸ்தம்பட்டி பகுதி -09.05.2025 - திருச்செங்கோடு இந்திர மூர்த்தி, சேலம் (வடக்கு) - குமாரசாமிபட்டி பகுதி -10.05.2025 - பவித்ரம் கண்ணன்(எ) ஜானகிராமன், சேலம் (வடக்கு) - செவ்வாய்ப்பேட்டை பகுதி -11.05.2025 - வி.கவி.கணேசன் மு.கபில், சேலம் (வடக்கு) - அரிசிபாளையம் பகுதி -12.05.2025- பவித்ரம் கண்ணன்(எ) ஜானகிராமன், சேலம் (வடக்கு) - பொன்னம்மாபேட்டை பகுதி - 8.5.2025- சி.செந்தில்குமார்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கழகத் தலைவர் அறிவிப்பின்படி

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில்

# "நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு"

# கழக ஆட்சியின் சாதனை விளக்க தொடர் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



தமிழ்நாடு மக்கள் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில் "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி, நாடே பார்த்து வியக்கும் வகையில் 4 ஆண்டுகளில் ஈடில்லா சாதனைகளை படைத்து இந்தியாவின் நம்பர் 1. முதல்வர் என்ற வரலாற்று சரித்திரத்தை படைத்து, நல்லாட்சி நடத்தி வரும் "மக்களின் முதல்வர்" நாம் நாலும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்று தமிழ் இனத்திற்காகவும், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்காவும் ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களுக்கு விளக்கிடும் வகையில்

"நாடு போற்றும் நான்கு ஆண்டு - தொடரட்டும் பல்லாண்டு" என்ற தலைப்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மே 12-ஆம் தேதி முதல் மே 16-ஆம் தேதி வரை பொதுக் கூட்டங்களை கீழ்க்கண்ட ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகங்களில் கீழ்க்கண்ட தேதிகளில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி சிறப்பு பேச்சாளர்களைக்கொண்டு நடத்தப்பட உள்ளது.

| நாள் | சட்டமன்றத் தொகுதி | கூட்டம் நடைபெறும் ஒன்றியம் நகரம் – பகுதி – பேரூர் | உரையாற்றும் சிறப்பு பேச்சாளர்கள் |
|---|---|---|---|
| 12.5.2025 திங்கள் | ஆலந்தூர் தொகுதி | ஆலந்தூர் தெற்கு பகுதி | சென்னை அரங்கநாதன் ரிஷி சந்தோஷ் |
| | திருப்பெரும்புதூர் தொகுதி | திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | சைதை மா.அன்பரன் |
| | பல்லாவரம் தொகுதி | பம்மல் தெற்கு பகுதி | நெல்லை மணி |
| | தாம்பரம் தொகுதி | தாம்பரம் கிழக்கு பகுதி | க.ஒப்பிலாமணி |
| | செங்கல்பட்டு தொகுதி | காட்டாங்கொளத்தூர் தெற்கு ஒன்றியம் | ஆலந்தூர் மலர் மண்ணன் |
| | திருப்போரூர் தொகுதி | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | முனைவர் வா.மு.சே.ஆண்டவர் |
| 13.5.2025 செவ்வாய் | ஆலந்தூர் தொகுதி | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | கவிஞர் ஈகை கோ.தனசேகரன் |
| | திருப்பெரும்புதூர் தொகுதி | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | வி.ராமையா |
| | பல்லாவரம் தொகுதி | செம்பாக்கம் வடக்கு பகுதி | சைதை பி.பாஸ்கரன் |
| | தாம்பரம் தொகுதி | தாம்பரம் மேற்கு பகுதி | முனைவர் த.ஜெகதீசன் |
| | செங்கல்பட்டு தொகுதி | செங்கல்பட்டு நகரம் | கதிர்.மீனாட்சி சுந்தரம் |
| | திருப்போரூர் தொகுதி | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | என்.நெல்லை மணி |
| 14.5.2025 புதன் | ஆலந்தூர் தொகுதி | புனிதோமையர் மலை வடக்கு ஒன்றியம் | முனைவர் வா.மு.சே.ஆண்டவர் நா.அருண் |
| | திருப்பெரும்புதூர் தொகுதி | குன்றத்தூர் நகரம் | சைதை மா.அன்பரசன் பா.ஸ்ரீலேகா |
| | பல்லாவரம் தொகுதி | பம்மல் வடக்கு பகுதி | க.ஒப்பிலாமணி மா.பூபதி |
| | தாம்பரம் தொகுதி | பெருங்களத்தூர் வடக்கு பகுதி | சென்னை அரங்கநாதன் ச.பேரரசன் |
| | செங்கல்பட்டு தொகுதி | மறைமலை நகர் நகரம் | ஆலந்தூர் மலர் மன்னன் ரு.கீர்த்தனா |
| 15.5.2025 வியாழன் | ஆலந்தூர் தொகுதி | கண்டோன்மெண்ட் நகரம் | கவிஞர் ஈகை கோ.தனசேகரன் |
| | திருப்பெரும்புதூர் தொகுதி | மாங்காடு நகரம் | வி.ராமையா வி.பாலமுருகன் |
| | பல்லாவரம் தொகுதி | பல்லாவரம் தெற்கு பகுதி | திருவாரூர் த.ஜெயராமன் |
| | தாம்பரம் தொகுதி | பெருங்களத்தூர் தெற்கு பகுதி | முனைவர் த.ஜெகதீசன் வீ.தினேஷ் |
| | செங்கல்பட்டு தொகுதி | நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரம் | கதிர். மீனாட்சி சுந்தரம் க.பார்கவி |
| 16.5.2025 வெள்ளி | ஆலந்தூர் தொகுதி | ஆலந்தூர் வடக்குபகுதி | முனைவர் வா.மு.சே.ஆண்டவர் |
| | திருப்பெரும்புதூர் தொகுதி | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | சென்னை அரங்கநாதன் |
| | பல்லாவரம் தொகுதி | பல்லாவரம் வடக்கு பகுதி | கவிஞர் ஈகை கோ.தனசேகரன் |
| | தாம்பரம் தொகுதி | செம்பாக்கம் தெற்கு பகுதி | ஆலந்தூர் மலர் மன்னன் |
| | செங்கல்பட்டு தொகுதி | காட்டாங்கொளத்தூர் வடக்கு பகுதி | க.ஒப்பிலாமணி |
| | திருப்போரூர் தொகுதி | திருப்பொரூர் வடக்கு ஒன்றினம் | சைதை மா.அன்பரசன் |

எனவே, அந்தந்த ஒன்றிய - நகர - பகுதி- பேரூர் கழகச் செயலாளர்கள், மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் தொடர் பொதுக்கூட்டங்களை மற்றும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு, அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர்களில் அடங்கி உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் தந்து, அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து மிகவும் சிறப்பான முறையில் இக்கூட்டங்களை ஏற்பாடு செய்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.